ஜெமினி
..ரிலீஸ்..
விலை அரை அணா
ஜெமினி
நந்தனார்
தண்டபாணி தேசிகர்.. செருகளத்தூர் சாமா.. டைரக்ஷன்·முருகதாஸ்

## நடிகர்கள்

| | |
|---|---|
| தண்டபாணி தேசிகர் | செருகளத்தூர் சாமா |
| கந்தனர் | வேதியர் |
| எல். நாராயண ராவ் | ஜம்பு |
| எம். ஆர். சுவாமிநாதன் | வள்ளுவன் |
| கொத்தமங்கலம் சுப்பு | பாகவதர் |
| சுவாமி மணி | தீக்ஷிதர் |
| வேலாயுதம் | மின்னடியான் |
| அப்பண்ண அய்யங்கார் | மொக்தை |
| கிருஷ்ணமூர்த்தி | பொட்டை |
| ராமசாமி பிள்ளை | பெரிய கிழவன் |
| ஜி. வி. சர்மா | மாரி |
| வி. பி. எஸ். மணி | வெள்ளை |
| புலியூர் துரைசாமி அய்யர் | வெறியன் |
| ராஜமய்யங்கார் | மாமுண்டி |
| ஞானம்பாள் | வேதியர் மனைவி |
| ஜெயலக்ஷ்மி அம்மாள் | கந்தன் தாயார் |
| அங்கமுத்து | வெள்ளச்சி |
| சக்குபாய் | விரி |
| சுந்தரிபாய் | கருப்பி |

சிவ தாண்டவம்: ரஞ்சன், பி. ஏ., எம். லிட்.

சேரி கடனங்கள்: என். தியாகராஜன், பி. ஏ.

டைரக்ஷன்

முருகதாஸா

கதை, வசனம்
கி. ரா.

பாடல்கள்
பாபநாசம் சிவன்
கொத்தமங்கலம் சுப்பு

உதவி டைரக்ஷன்
கொத்தமங்கலம் சுப்பு
ம. துரை

ஒலிப்பதிவு
பி. கே. விஸ்வநாத்
கே. ஆர். ராமஸ்வாமி

சங்கீத டைரக்ஷன்
எம். டி. பார்த்தசாரதி
எஸ். ராஜேஸ்வர ராவ்

ப்ரொடக்ஷன் மானேஜர்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்




பின்னணி சங்கீதம்
ஜெமினி ஆர்ச்செஸ்ட்ரா

படப்பிடிப்பு
ஸைலன் போஸ்
வி. எஸ். ரெங்கா

காட்சி ஜோடனைகள்
கே. ஆர். சர்மா
கூட்வான்கர்
எ. பி. செல்லையா

லெபரட்டரி
வி. ராமஸ்வாமி
எம். சேஷகிரி ராவ்

எடிட்டிங்
வி. பங்க

ஜெமினி ஸ்டுடியோவில்
ஜெமினி தயாரிப்பு

# ஜெமினி கந்தனர் ..... கதைச் ..... சுருக்கம்

அசுத்தம், அராகரிகம், குடிப் பழக்கம் நிறைந்த சேரி ஜனங்களின் வாழ்க்கையினின்றும் முற்றிலும் மாறுபட்ட கந்தன் சதா ஈஸ்வராராதனத்திலும், ஜனங்களுக்கு ஈஸ்வர பக்தியை உண்டாக்குவதிலுமே காலத்தைச் செலவிடுகிறான்.

சேரி ஜனங்களின் மூட பக்தியையே மூலதனமாகக் கொண்டு பிழைக்கும் சேரி பூசாரி வள்ளுவனுக்கு கந்தனுடைய பிரசங்கங்கள் வெறுப்பைக் கொடுக்கின்றன. ஆகையால் வள்ளுவன், கந்தனைப் பற்றி கெட்ட அபிப்பிராயத்தை எல்லோருக்கும் ஏற்படுத்த முயற்சிக்கிறான்.

சேரியில் வெறியன் என்ற ஒரு வலுடைய குழந்தைக்குத் தரித்திரத்தின் காரணத்தால் உடம்பு அசௌகரியம் ஏற்படுகிறது. வள்ளுவன் 'இந்த வியாதி குட்டிச்சாத்தான் சேஷ்டை' என்று சொல்லி குழந்தைக்குப் பழுக்கக் காய்ச்ச இரும்பால் சூடுபோட ஏற்பாடுகள் செய்து உடுக்கடிக்கிறான். சூடு போடப் போகும் சமயத்தில் கந்தன் வந்து வள்ளுவனை விரட்டி விடுகிறான்.

சேரியில் வள்ளுவன் தலைமையில் கரகம் ஆட்டம் அமோகமாக நடக்கிறது. பூஜைக்கு ஒவ்வொரு வீட்டிலிருந்தும் சாமான்கள் சேகரிக்கிறார்கள். கந்தனிடமும் கேட்கிறார்கள். வாயில்லாப் பிராணிகளைக் கொன்று, குடித்துக் கொம்மாள மடிப்பது தவறென்றும், சிவபஜனைதான் மோக்ஷ சாதனமென்றும் சொல்லுகிறான். வள்ளுவன் கோபத்துடன் கந்தன் பேச்சைக் கேட்கக்கூடாது என்று கத்துகிறான். கந்தன் பதிலுரை பேர்களுடன் திருப்புங்கூருக்குப் போகிறான்.

வள்ளுவன், மின்னடியான் முதலியோர் வேதியர் வீட்டுக்கு வருகிறார்கள். மின்னடியான் வேதியரிடம் கந்தன் 11 பேர்களுடன் திருப்புங்கூருக்குப் போய்விட்டதாகச் சொல்லுகிறான். வேதியர் கோபமடைந்து அவர்களுடைய கூலியைப் பிடிக்கச் சொல்லி உத்திரவிடுகிறார்.

கந்தன் தன் கோஷ்டியாருடன் குதூகலத்துடன் திருப்புங்கூருக்கு வருகிறான். தரிசனம் செய்ய முடியாமல் நந்தி மறைத்திருக்கிறது. குதூகலம் போய் துக்கம் தாங்க முடியாமல் பகவானைப் பிரார்த்தித்துக் கெஞ்சுகிறான். இடி முழக்கம் போன்ற சப்தத்துடன் நந்தி விலகி விடுகிறது. கந்தன் ஆனந்தமாக தரிசனம் செய்கிறான்.

திரும்பி வரும் வழியில் சிதம்பரத்தின் பெருமையைப் பற்றி அசரீரி பாடுகிறது. உடனே சிதம்பரம் போக மற்றவர்களை அழைக்கிறான். வேதியர் கோபிப்பார் என்றும் அவரைக் கேட்டுக்கொண்டு பிறகு போகலாமென்றும் சொல்லியதால் திரும்பி ஆதனூருக்கு வருகிறான். எல்லோரையும் சிதம்பரம் வாருங்கள் என்று அழைத்துப் பாடிக்கொண்டு வேதியர் வீட்டுக்கு வருகிறான்.

அங்கே வந்து சிதம்பரம் போக விடை கேட்கிறான். வேதியர் கோபித்து அவனுடைய ஜாதித் தொழிலைக் கவனிக்கும்படி சொல்லி விடுகிறார். கந்தன் ஏமாற்றத்துடன் திரும்புகிறான்.

இதற்குள் சேரி ஜனங்கள் ஜாதிச் கூட்டம் போடுகிறார்கள். வள்ளுவன், கந்தன் செய்வதை யெல்லாம் கண்டித்துப் பேசுகிறான். பெரிய பிழவன் தான் கந்தனுக்கு நல்ல புத்தி சொல்லுவதாகப் பறப்பட்டு கந்தனிடம் வருகிறான்; பேசுகிறான். கந்தன் பிழவன் மனதை மாற்றி விடுகிறான். இதைக் கேட்டதும் வள்ளுவனுக்கு ஆவேசம் வந்து விடுகிறது. கருப்பண்ண சாமிக்கு உடனே பூசை போட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் ஊரையே அழித்து விடுவதாகவும் மிரட்டுகிறான். சேரி ஜனங்கள் பயந்து போய் பூசை போடுவதாகச் சொல்கிறார்கள்.

கருப்பண்ணசாமி கோவிலில் அமர்க்களமாக பூசை நடக்கிறது. ஆடுகளைப் பலியிடப் போகும் சமயத்தில் கந்தன் வந்து தடுத்து விடுகிறான். வள்ளுவன் தப்பி ஓடி விடுகிறான். மற்ற ஜனங்கள் கந்தனுக்குப் பயந்து கந்தன் சொற்படி சிவபூஜை செய்கிறார்கள்.

மறுநாள் சில சேரி ஜனங்கள் ஒன்று சேர்ந்து வேதியரிடம் வந்து கந்தன் தங்களை ஹிம்சிக்கிறான் என்று புகார் செய்கிறார்கள். வேதியருக்கு கந்தன் மேல் கோபமுண்டாகிறது. கந்தன் வேதியர் வீட்டுக்கு வந்து சிதம்பரம் போக அனுமதி கேட்கிறான். வேதியர் போகக்கூடாது என்கிறார். கந்தன் மீண்டும் மீண்டும் மன்றாடிக் கேட்க வேதியர் கோபமடைந்து அவனுக்குக் கடுமையான வேலை கொடுக்கிறார்.

கந்தன் வயலில் வேலை செய்கிறான். சதா சிதம்பரத்தைப் பற்றியே நினைத்து உருகுகிறான்; பாடுகிறான். மற்ற ஜனங்களும் வேலையை நிறுத்தி விட்டு கந்தன் கூட சேர்ந்துப் பாடுகிறார்கள். இதையறிந்த வேதியர் கோபத்துடன் வயலுக்கு வருகிறார். கந்தனை கன்னாபின்னாவென்று அடித்து விடுகிறார்.

மறுபடியும் கந்தன் வந்து சிதம்பரம் போக வேண்டுமென்று உத்தரவு கேட்கிறான். வேதியர் நாற்பது வேலி நிலத்தையும் உழுது அறுவடைக்குச் சித்தம் பண்ணிவிட்டு அவன் சிதம்பரம் போகலாமென்கிறார். கந்தன் ஏமாற்றத்துடன் திரும்புகிறான்.

ஈஸ்வரன் பிரத்யக்ஷமாகிறார். தரிசல் நிலங்கள் எல்லாம் உடனே உழுது பயிரிடப்பட்டு, நாத்து வளர்ந்து பெரிதாகி அறுவடைக்குச் சித்தமாக மாறுகின்றன.

மறுநாள் ஜம்புவும் வேதியரும் வயலுக்கு வந்து இந்த அற்புதத்தைப் பார்க்கிறார்கள். வேதியர் ஓடி வந்து கந்தன் காலடியில் விழுந்து தன் பிழையை மன்னிக்கும்படி வேண்டுகிறார். கந்தன் ஆனந்தத்துடன் விடை பெற்றுக் கொண்டு சிதம்பரத்திற்குப் பறப்படுகிறான்.

சிதம்பரத்தில் தீக்ஷிதர்களின் கனவில் நடராஜமூர்த்தியின் ஜோதி தோன்றி கந்தனை அழைத்து வரும்படி ஆக்ஞாபிக்கிறது. தீக்ஷிதர்கள் அழைத்துக்கொண்டு கோவிலுக்கு வருகிறார்கள். சேரியில் உள்ளவனை எப்படிக் கோவிலுக்குள் அழைத்துக் கொண்டு செல்வது என்ற பிரசினை எற்படுகிறது. கடைசியில் அக்னிப்பிரவேசம் செய்து அழைத்துச் செல்வதாக முடிவு செய்து, கந்தன் அக்னிப் பிரவேசம் செய்கிறான். திவ்ய தேஜோமயமான உருவத்துடன் அக்னியிலிருந்து வருகிறான். நடராஜமூர்த்திக்கு தீபாராதனை நடக்கிறது. கந்தன் மனமுருகிப் பாடுகிறான். நடராஜமூர்த்தியின் ஆனந்தத் தாண்டவம் நடக்கிறது. கந்தன் திருமூலநாதனின் திருவடி நிழலை அடைகிறான்.



## 1 தலைப்புப் பாட்டு

ஆனந்த தடமிடும் பாதன்
பொன்னம்பலவாணன் சிதம்பர நாதன் (ஆ)
காணம்தனைத் தொடர்ந்து ஞானம் தரும் பேரின்ப
மோனம் தழைக்கும் யோக வானம் தனில் மகிழ்ந்து (ஆ)
தத்தைமொழி சிவகாமி மணாளன்
சத்வகுணன் பதினெண்குல காவலன்
தத்வமஸீப் பொருளாய தயாளன்
சதா நிஜ அன்பர் வணங்கு தாளன்
தத்தரி கிட நிமி ஜணுத ஜணுத நீம்
தக தகிங் கிணதோம் ஜண ஜண ஜணவென
பக்தர்கள் முனிவர்கள் இமையோர்களும்
புகழ் பாடவும் புனல்சேர் சடை மதி யாடவும் (ஆ)

## 2 கந்தன் ] [ லதாங்கி - ஆதி

பிறவா வரம் தாரும் — பெம்மானே (பிறவா)
பிறவா வரம் தாரும் இறைவா
மறுபடி பிறந்தால் உன் திருவடி
மறவா வரம் தாரும் மானில மேலினீ (பிறவா)
பார்வதிநேயா பக்தர் சகாயா
பக்தமருதா வந்தருள் தாதா
மூன்றைவினை கோர சிந்தாகுலம் தீர
என்றாயுன் பாதார விந்தம் துணைசேர (பிறவா)

## 3 போட்டை ] [ தேம்மாங்கு

மஞ்சக்குளிச்சவளே மருக்கொழுந்து வச்சவளே
பிஞ்சிலே பழுத்தவளே — என் தங்கமே பெரியதனம் பேசாதேடி
கண்டைக்கால் கொலுசு தாரேன் — கட்டிக்கிட சேலை தாரேன்
கொண்டைக்குப் பூவும் தாரேன் — என் தங்கமே
கொஞ்சி முத்தம் தருவாயோடி

தண்டையடிக்கு, மேலெடுக்கு தங்கமே தில்லாலே
ஆத்துத்தண்ணி போறபோக்கு பொண்ணுமே தில்லாலே

## வேறு

அப்பா மகனே பாம்பு — ஐயோ மகனே பாம்பு
அரவம் கடிக்கலாச்சுதே — மகனே

ஆலமர மென்பது இதுதானே
பாலன் மடிந்த இடம் இதுதானே

ஓராசாரம் உடலது தளர்ந்து
சொண்டாமாசம் கீ எத்நிரிச்சு கடக்து

4 கந்தன் ] [ காதகாமக்ரியை — சூபகம்

சிவலோகநாதனைக் கண்டு சேவித்திடுவோம் வாரீர் (சிவ)
அற்பசுகத்தை நினைக்தோம் அரன் நிருவடிகளை மறக்தோம்
கற்பிதமாயா பிரபஞ்சமிதை கானல் ஜலம்போலே எண்ணி (சிவ)
ஆசைக்கடலில் விழுக்தோம் அறிவுக்றிவை இழக்தோம்
பாசமகல வழிதேடாமல் பாதகிக்கும் பாலியானோம் (சிவ)
பவபயங்களைப் போக்கி அவர் பரமபதத்தைக் கொடுப்பாரந்த (சிவ)

வழிநடைச் சிந்து

கட்டகடவு செழிக்கவேணும் கஞ்சை
காத்தெங்கும் பச்சை புடிக்கவேணும்
தொட்டதெல்லாம் தங்கமாக வேணும் — கெஞ்ச
தோணுமெண்ணங்கள் கை கூடவேணும்

உடுக்கடிச்சே அவர் தாண்டவம் போட்டு — இந்த
உலகமெல்லாம் வாழ குறி சொல்லுரார்
கடுக்கையிலே வக்து காத்துப்பறிப்பார் — அவர்
கஞ்சை புஞ்சை வீடுவாசல் காத்துகிடப்பார்

பட்டரைச் சேந்தியில் வீட்டம் களஞ்சியம்
மூட்டமூட்ட கெல்லைக் கொட்ட வேணும்
கட்டுக் கலங்கண்டு காலடிகெல் பொதி
காணவேணும் மிசசந்தோண வேணும்

உழுதுபரம்படிக்க ஒத்தை மாடிருக்குது — இந்த
உலகுசெழிக்க சக்தரூரியர் தோடிருக்குது
தொழுது கும்பிடு உதவப்பக்கம் தாயிருக்கிரான் — தாய்யோன்
தானுமாடி உலகும் ஆடத்தானே செய்யுரான்

தாயொடுதக்தையும் தாரமும் தானவன்
தம்பியுமண்ணனும் தானவனே
பேயையும் சொந்தங்கொண்டாடும் பிரானவன
பிள்ளைகுட்டி சுற்றம் யாவுமவன்

உலகளக்தான் தானம் போடுகிரான் - இந்த
உயிர்ப்படைப்பான் பாட்டுப்பாடுகிரான்
மலைவளக்தான் கூட ஆடுகிரான் - இந்த
மருக்துவகாணவே ஓடுகிரோம்

6 கந்தன் ] [ தோடி — ஆதி

பாலிப்பதையன் இந்த ஊரில் வக்துமிவன்
பாவம் நீரேலே உந்தன் பாதத்தில் சேரேலே
சிவலோகநாதா மாடு வழிமறைத்திருக்குதே—மலைபோல்
ஒரு மாடு படுத்திருக்குதே



தோடியில் நின்று தெரிசித்தாலும் போதும்
கோவில் வரமாட்டேன் ஸ்வாமி
ஓடிவிளையாடி போதுமிங்கே நின்று
உற்றப் பார்க்கச்சற்றே விலகாதோ மாடு
வழி மறைத்திருக்குதே - மலைபோல்

7 கந்தன் ] [ கேதாரகௌளம் - மிச்ரம்

எனக்குமிரங்கியுன் எம்பிரான்
என்ன அதிசய மேழைக் கேழை (எனக்கு)

இனிக்கும் பாவன நாமம் அரஹரா
என்றவுடன் இனங்கன்றின் பசுபோல் (எனக்கு)

எட்டுமிரண்டறியாத மூடன்
சனகுலம் வந்த தினனெக்கே
அட்டதிசை தொழும் அய்யன் என்கே
ஆதாவாய் நிவ்ய தரிசனம் தந்து (எனக்கு)

8 பஜனை ] [ கவரோஜ - ஆதி

ஹரஹரஹராஹர மகாதேவ
பார்வதிரமண சதாசிவ
ஹரஹரஹராஹர மகாதேவ
கௌரீரமண சதாசிவ

9 அசரீரி ] [ காபி — சூபகம்

கனகசபையைக்கண்ட பிறகோர்
காட்சியுமுண்டோ (கனக)

சிவகாமி கேசன் - கடாராஜன்
நிரு கடம்புரி சிதம்பரம் சென்று (கனக)

10 கந்தன் ] [ பிலஹரி — ஆதி

எல்லோரும் வாருங்கள்
சுகமிருக்குது பாருங்கள் (எல்லோ)

கல்லோர் பணிக்திடும் நில்லையம்பல
நாதன் பாதம் பணிக்தகொள்வோம் (எல்லோ)

11 பாகவதர் ] [ பந்துவராளி — ஆதி

காக்கவேண்டும் கடவுளே - கடைக்கண்ணால்
பார்க்கவேண்டும் கடவுளே (காக்க)

பார்க்குள் உன்நிருவடி பக்திசெய் வேதியர்
பாபமெல்லாம் பொடிபடும்படி பவனினை
விடும்படி தக தகிங்கணதோம் (காக்க)

கந்நிமூகம் அரிச்சக்நிரன் போல் அகம்
இந்நிரன்போல் சுகம் இருக்க அருள் செய்து
செக்நிருவும் கலைசக்நதன் செய்வமும்
சேர்த்து புகழ்தா சிவனே நிருபை செய்து (காக்க)

கந்தன் ] [ ராகமாலிகை — ரூபகம்

நில்லேயம்பலத் தல மொன்றிருக்குதாம்
அதைக்கண்ட பேர்க்கு ஜனன மரணப்
பிணியைக் கருக்குதாம்

உயரும் சிகர ரும்பம் தெரியதாம்
அதைப் பார்த்தபேர்க்கு உள்ளங்குளிர கருணைபுரியுதாம்
போய்வருக உத்தாரம் தாருமே
உத்தன் பொன்னடித்துள் போற்றுவேன் கண்ணாலே பாருமே

வேதியர் ] [ முகாரி — ஆதி

சிதம்பர தரிசனமா — நீயதை சிந்திக்கலாமா பறையா (சித)

தெம்பரதெரிசனம் சதுர்மறையோர்கள்
செய்வது நியாயம் நீ சொல்வது மாயம்
நில்லாதே — அங்கே செல்லாதே
சேரிக்குப் போடா — காலேக்கு வாடா (சித)

நந்தன் ] [ ஸ்ரீரஞ்சனி — திச்ரம்

காணவேண்டாமோ — இருகண் இருக்கும் போதே
வீண்உயர் கோபுரம் (காண)

வீணில் சேரியைச் சுற்றிச்சுற்றி வந்தால்
மேதினிபோற்றும் தெம்பர தேவனே (காண)

ஓட்டைச்சடலம் ஒடுங்க வெற்றெலும்புக்
கூட்டிலிருந்துயிர் ஓட்டம் பிடிக்குமுன் (காண)

வையத்திலே கருப்பையில் கிடந்துள்ளம்
வையப்பிறவாமல் ஐயன் திருவடம் (காண)

பெரிய கிழவன் ] [ பீலு — ஆதி

அம்பலப் பாட்டே அருள்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருள் பாட்டே
நடராஜன் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பரட்டே
சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப் பாட்டே

பறையர்கள் ] [ பெரிய கடுக்கை

வீரன் இருளன் காட்டேரி —வெறியன் கொண்டி சாமுண்டி
தரித்தண்டி நல்லண்ணல்—தொட்டியச்சின்னன் பெத்தண்ணன்
மாரி முனியன் சங்கிலியன் —மாடன் கருப்பன் பாவாடை
சேரி மின்னான் மின்னிடியான்— சிறுகாட்டுடையான் மினமாத்தான்
மாரியாண்டி வழிமறிச்சான் — மலையன் சாத்தான் பக்கிரியும்
எரிகாக்கும் சிலம்பாயி — இடையான் கல்லான்
ஊமையோடு (வீர)



17 பறையர்கள் ] பூஜைப் பாட்டு [ அகவல்

எல்லேப் பிடாரியே
என்முன்னே வாவா எங்களேக்காவா
எதிராக வந்திங்கே
எங்களேக்காவா என்முன்னே வாவா
முண்டாசுக்காரா கொண்டிவீரப்பா
முன்வந்து காவாவா கொண்டிவீரப்பா
கச்சையரிவான் வச்ச கருப்பண்ணசாமியே
இச்சையுடன் வேண்டும் வரம் எங்களுக்குத் தாதா
ஆடு வெட்டிக் கும்பிடுறோம் அடைக்கலம்காத்தான்
காடுகரை செழிக்கவேணும் காளிமகமாயி

18 பஜனை ] [ மிச்ரம் — த்ரிதாளம்

சம்போ — சங்கர — சாம்பசிவா
ஹர சாம்பசிவா (ஹர)

ஆடியபாதா அம்பல நாதா
அறுமறை போற்றும் சாம்பசிவா (ஹர)

தீனதயாளா சாம்பசிவா
தேவசகாயா சாம்பசிவா (ஹர)

19 பறையர்கள் ] கொண்டிச்சிந்து

வரவாக் கெட்டுப் போச்சு — சேரியில்
வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான்
குடியிருக்கவே மாட்டோம் — எப்போதும்
கூக்குரல் போடுகிறான் ஆக்கை மறந்தே - சிரிப்பானொருவேனை
நில்லே தெம்பரமென்று செல்லி மதம் பிடித்தே
குதிப்பானொருவேனை — நக்கு முக்கல்
கொண்டவன் போலே எதையோ கண்டவன் போலே
களிப்பானொருவேனை — மாம்போலே கையசைக்கல்
காலசைக்கல் மெய்யசைக்கலும் இருக்காதொருவேனை
எனம்பி வாய்விட்டலறுகுரல் ஊரெட்டுமே
கோயிலுக்குப் போவோ மென்பான் — எக்கோயும்
கும்பிடச் சொல்லி இல்லாத வம்பு பண்ணுவான்
சுத்திவாச சொல்லியடிப்பான் — சிவன்பேரைச்
சொல்லுடா சன்னிதியில் நில்லுடா வென்பான்
சொல்லித் தொலைக்க வேணும் — சொல்லாட்டி
சுக்குமாந்தடி கொண்டு கொக்கிவிடுவான்
சிவனென்று மூணுவாட்டி — காங்களும்
செப்பவேணும் செப்பாவிடில் வப்பிலுதைப்பான்
இது வென்ன காரணமோ — எங்களுக்கு
ஈனமிருக்குது மானமல்லவோ
பூசைகளேப் போட்டுப் பார்த்தோம் — ஒண்ணிலேயும்
போவதில்லே காரியமும் ஆவதில்லையே

வள்ளுவனுரைக் கேட்டோம் — அவர்
எடுத்துச் சொன்னார் இதை விடுத்துச் சொன்னார்
மயான உருத்திரனார் பிடித்துவாட்டுதடா
இப்படி யாட்டு தென்னர்
தெளியாதென்று சொன்னர்

கந்தன் ] [ ராகமாலிகை — விருத்தம்

ஜாதியிலும் கடையேன் மறைபாகம நூல்கள் புராணமும் ஒன்றறியேன்
தகுகன் திருச் சமுகந்தனி லேழை புலம்புவதும் தகுமோ
ஆதிசிதம்பாரகதன் நடம்புரி பாதம் பணிக்திரு கண்குளிர
ஆசையில் என்மனம் தாமரை போலென தத்தளித்தேங்குதே அந்தி பகல்
பேதை எனக்கினியார் கதி என்குறை தீர்ப்பவர் யார்முறை கேள்ப்பவரார்
சிறுபிள்ளை முதல் ஒருகன்னமில்லாம லுழைப்பது தகுகன் உன்னமறியும்
வேதமுணர்ந்த மெய்வித்தகரே மிகவுத்தமரே இன்னுமெத்தனை நான்
மேதினிவாழ்விலுழன்றிடுவேன் — விடைதந்தருள்வீர் உயர் அந்தணரே

கந்தன் ] [ சங்கராபரணம் - ஆதி

த்தம் தெளிய மருந்தொன்றிருக்குது பேரின்பமன்றிலுன்னேன்
ற மருந்துகள் நின்றிலுமுன்னுக்குச் செல்லாது அல்லல்படும்மனம் கில்லாது
நிலை தரிசன (பித்த)
ம்பும் புலியும் மெய்ப்பாடுபட்டுத்தேடி பார்த்துப்பயிரிட்டது
ளைந்த நிருமாயனும் வேதனும் பார்த்துக் களித்ததுண்டு
ர்வதி யென்றொரு சீமாட்டியதில் பாதியைத் தின்றதுண்டு
ன்னும் பாதியிருக்குது பறையா கீபேரய்ப் பார் என்றுத்தாம் தாரும் தாரும்
(பித்த)

கருப்பி ] [ குறம்

கனிஞ்ச பழம்மேல் ஆசைப்பட்டு கலங்கி நிக்கிறே — மச்சான்
தணிஞ்ச இறக்க பயந்துக்கிட்டு தாரிக்கிறே
ஒசந்த கொமபில் இருக்குதப்பேன் ஒனக்குக் கிட்டாது
யோசியாமே மீசை முறுக்கி மோசம் போகாதே
பழுக்கவிட்ட மரத்துக்காரன் பார்த்துக் கிட்டான்னு — உன்னை
வெளுத்து கொறக்கி முதுகுத்தோலை உரிக்கப் போறானே

வேதியர் ] [ பலஹம்ஸ - ஆதி

உனையல்லால் கதியார் உலகிலே
உனைகம்பினேன் சம்போ பூரரே (உனை)

சனகாதிமுனிவர் பூஜை செய்ய அருள்
சந்திரசேகர கருணாகர (உனை)

பகவன் பசுபதே பரமசிவ
பார்வதிபதே புவனபதே
குகன் யானை முகனை ஈன்றவள் என் மனம்
கோவில் கொண்டவர் கடைக்கண் பார்த்தருள் (உனை)



24 கந்தன் ] [ கும்மி

காமமகற்றிய ஞானவன் சிவகாம சௌந்தரி நேயனவன்
மாமறையோது செவ்வாயனவன் மணிமன்றெனும்ஞான ஆலயனவன்
கல்லைக் கனிவிக்கும் சித்தனவன் மூடி கண்களைக்கருளிய கர்த்தனவன்
நில்லைச் சிதம்பர சித்தனவன் தேவர் சிங்கமெனும் உயர்தக்கமவன்
அமபலத்தாடல் செய்அய்யனவன் அன்பர் அன்பிற்கெளிதரும் மெய்யனவன்
தும்பைமுடிக்கணி தய்யனவன் ஸ்வயம ஜோதிபவன் பாஞ்ஜோதியவன்
சிவசக்கரமைப் பணிந்தாடுவோம் புகழ்பாடுவோம் தினமே
அவன்புகழ் பாடுவோம் தினமே

25 வள்ளுவன்

உயரப் பனைமேல் கலையம் தொங்குதாம்
கள் உண்டபேர்க்கு உள்ளும் பறமும் ஜிவஜிவுக்குதாம்
சோணையன் கடைகள்ளுத தண்ணியாம்
சொரத்தாகக் கண்ணே சொருகிச் சொருகி குளுகுளுக்குதாம்

26 கந்தன் ] [ சிந்து - பைரவி

ஹாஹா ஜகதீசா அருள்புரி பரமேசா
வரமருள் புரிவாயோ திருவருள் புரிவாயோ
சோதனை போதாதோ வேதியர் மனமிரங்காதோ
காதனே நான் என்னசெய்வேன் நாற்பது வேலிநிலம்
உழுதுகடவும் பொழுது மில்லையே
உன்னைத்தொழ உந்தன் சன்னிதி சேர்வதென்றோ

27 கந்தன் ] [ வராளி - பஞ்ஜ

என்னப்பனல்லவா — எந்தையுமல்லவா
பொன்னப்பனல்லவா — பொன்னம்பலத்தவா
சொப்பனமோ என்றன் அப்பன் திருவருள்
கற்பிதமோ என்ன அற்புதமிதுவே
ஆடியபாதனே — அம்பலவாணனே
இன் ஆழ்ந்த கருணையை எழையறிவேனோ (என்ன)

28 வேதியர் ] [ சிம்மேந்த்ர மத்யம் - ஆதி

ஏழைப் பார்ப்பான் செய்திடும் பிழையை ஏற்றுக் கொள்ளாதே
நான் இனமயறியாதவன் பின்புத்திக்காரன் எனை நீ தள்ளாதே (ஏழை)
சாதியில் பெரியேன் பூசைகள் புரிவேன்
சாத்திரப் பொதி சுமக்தேன்
ஆதிசிவன் கருணைத் திறமறியேன்
அகங்காரமே குடிகொண்டேன் (ஏழை)

29 கந்தன்] [ ராகமாலிகை - ஆதி

ஐயே மெத்தக்கடினம் — உமதடிமை (ஐயே)
பொய்யாத பொன்னம்பலத்தையர் பிருக்குமிடம்
கைவரத மனிதர்க்கு உய்யாது கண்டுகொள்ளும் (ஐயே)

மானபிமானம் விட்டுத் தானெதின்றவர்க்கு
சேனுதிபதிபோலே ஞானுதிபதியுண்டு — பாருமே
கட்டிக்காருமே — உன்னே சேருமே — அதுபோருமே

மூப்பாழுந் தாண்டிவந்து அப்பாலே நின்றவர்க்கு
இப்பார்வை விடையாது அப்பால் திருவடணம் — ஆடுவார்
தாளம் போடுவார் — அன்பர் கூடுவார் — இசைபாடுவார்

கண்டாரும் விடையாது — விண்டாருஞ் சொன்னதில்லே
அண்டாண்ட கோடியெல்லாம் ஒன்றுய்ச் சமைந்திருக்கும்
அல்லவோ — எழைசொல்லவோ — அங்கே செல்லவோ
கோமாகுதல்லவோ (ஐயே)

30 கந்தன் ] [ மாஞ்சி - மிச்ரம்

வருகலாமோ ஐயா — ரானங்கே (வருக)

உந்தன் அருகில்நின்று கொண்டாடவும் பாடவும் (வருக)

பரமகிருபாநிதி யல்லவோ — இந்தப் பறையனுபசாரம் சொல்லவோ
உந்தன் பரமானந்தத் தாண்டவம் பார்க்கவே ரானங்கே (வருக)

பூமியில் புலையனுய்ப் பிறந்தேனே ஒரு புண்ணியம் செய்யாமலிருந்தேனே
ஸ்வாமி உசசன்னிதி வந்தேனே பவசாகரம் தன்னையும் கடந்தேனே
கரைகடந்தேன் — சரணம் அடைந்தேன் — நில்லவாதா
எந்தன் பரிதாபமும் பாவமும் தீரவே ரானங்கே (வருக)

31 கந்தன் ] [ ராகமாலிகை - விருத்தம்

வீறுடுமுயலகன் முதுகில் ஒரு கால் வைத்த வித்தகா தேவதேவா
மெய்ஞ்ஞான மூர்த்தியே அஞ்ஞான இருளற வினங்கு செம்பொற் சோதியே
கூறும்உமை மனங்குளிர மால் அயனும் கொண்டாட வெள்ளிமலைமேல்
கொலுவீற்றிருந்த நீ அடிமைச்சொல்லையே குவலயத்தினே யடைந்தாய்
எழுதுமென் மலர்ச்சேவடி யெடுத்தாடும் எத்தையே காட்சி தருவாய்
எதுமறியாப் பேதை எனையாள வேண்டும் என் இறைவனே கடாஜனே

32 பஜனே

ஹர ஹர ஹர ஹர சங்கரனே
சிவ சிவ சிவ கங்காதரனே (ஹர)

சாம்ப சதாசிவ சத்சுகலாதா
சம்போ சரணம் சரணம் கிருபாகா (ஹர)


ஜெமினி நந்தனர் பரிசு

நீங்கள் கொடுப்பது ஒன்றுமில்லை

ரூ. 10,000

அனுல் நீங்கள் ஜெயிப்பது ரூ. 10,000


## நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

ஜெமினி கந்தனர் படத்தில் மற்ற சிறந்த அம்சங்களுடன் பாட்டுக்களும் அதி விசேஷமாய் அமைந்திருக்கின்றன. எல்லாம் அருமையான தமிழ்ப் பாட்டுக்கள். படம் பார்த்தான பிறகு இந்தப் படத்திலுள்ள பாட்டுக்களில் சங்கீதம், சாகித்தியம், அர்த்த பாவம் இவை மூன்றும் அதிகமாக நிறைந்துள்ள மூன்று பாட்டுக்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிறகு அந்த மூன்று பாட்டுக்களிலும் எது மிகவும் சிறந்தது, எது இரண்டாவதாகச் சிறந்தது, எது அடுத்தபடி சிறந்தது என்று நன்கு ஆலோசித்துத் தீர்மானித்து, அவற்றை வரிசைக் கிரமமாக 'ஜெமினி கந்தனர் பரிசுக் கூபன்' தாளில் எழுதி உங்கள் ஊரில் எந்த தியேட்டரில் படம் ஓடுகிறதோ அந்தத் தியேட்டரில் இதற் கென்றே பிரத்தியே கமாக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போட்டுவிட வேண்டும்.

குறிப்பு:— படம் பார்த்தவுடனேயே எழுதிப் போட்டுவிட வேண்டும் என்கிற அவசாமில்லே. நீங்கள் நிதானித்து ஒரு தாத்திற்கு நான்கு தரம் நன்கு யோசித்து, வேண்டுமானுல் தெரிந்தவர்களிடம் கலந்தாலோசித்துப் பிறகு எழுதலாம்.

## சரியான விடை எது?

இந்த ஜெமினி கந்தனர் படத்தைத் தயாரித்தவர்கள் மேற் சொல்லிய மூன்று அம்சங்களில் சிறந்ததெனத் தோன்றிய மூன்று பாட்டுக்களே, அவற்றின் தாதாரப்படி வரிசைக் கிரமமாகப் பொறுக்கி யெடுத்து சரியான விடையை ஒரு கவருக்குள் போட்டு வீல் செய்து சென்னே இந்தியன் பாங்க் தலைமை ஆபீஸில் இந்த 1942-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 19-ந் தேதியே வைத்து விட்டார்கள். இந்த விடைப் பிரகாரம் எவரொருவர் சரியாக எழுதுகிருரோ அவருக்குத்தான் பரிசளிக்கப்படும். ஆனுல் வரிசைக் கிரமம் மாறி யிருந்தால் பரிசு அளிக்கப்பட மாட்டாது. படம் தயாரித்தவர்களின் விடைதான் சரியான விடை யென்று ஒப்புக்கொள்ளுகிறவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பிரவேசிக்க அநுமதிக்கப்படுவார்கள். ஒன்றுக்கு மேல் சரியான விடை வரும் பட்சத்தில் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும். ஆயினும் தம் அறிவுத் திற மையை நன்கு செலவிடுபவர்களே பரிசை அடைய முடியும் என்பது நமது துணிபு.

## கூபன் பெட்டி

உங்கள் ஊரில் எந்த தியேட்டரில் படம் ஓடுகிறதோ அந்த தியேட்டரில் ஒவ்வொரு டிக்கட்டுடன் ஒரு கூபனும் வழங்குவார்கள். படம் ஓடும் கடைசி நாள் வரையில் அந்தத் தியேட்டரில் தபால் பெட்டி போன்று ஒரு பெட்டி வைக்கப் பட்டிருக்கும். இந்தப் பெட்டியில்தான் உங்கள் கூபன்களைப் போட வேண்டும். ஒருவரே எத்தனை கூபன்கள் வேண்டுமானுலும் போடலாம். கடைசி நாள்

ஆனதும் பெட்டியிலுள்ள கூபன்கள் சென்னைக்கு அனுப்பப்பட்டு விடும். கூபன்களை தபாலில் அனுப்பக் கூடாது. தபாலில் கிடைக்கப்பெறும் கூபன்கள் ஒப்புக்கொள்ளப்பட மாட்டா. வேண்டுமானால் இன்னொரு ஊருக்குப்போய் அந்த ஊர் தியேட்டரிலுள்ள பெட்டியில் கூபனைப் போடலாம். கூபன்கள் விஷயமாகவோ அல்லது இந்தப் பரிசு சம்பந்தமாக வேறு எவ்விதத்திலுமோ யாதொரு கடிதப்போக்கு வரவும் கண்டிப்பாய் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது. உங்கள் விடைகளை மேற்படி கூபனில்தான் எழுதவேண்டுமேயல்லாது சாதாரண காகிதங்களில் எழுதிப் போடக் கூடாது.

முக்கிய குறிப்பு :— ஒரு ஊரிலுள்ள நபர் அதே ஊரில் உள்ள கூபன் பெட்டியில்தான் கூபனைப் போடவேண்டுமென்ற நிபந்தனையில்லை. வேறு எந்த ஊருக்கும் போய்ப் படம் பார்த்து அங்கேயுள்ள பெட்டியிலும் கூபனைப் போடலாம். ஞாபகம் தவறாம விருக்க நீங்கள் எழுதிப் போடும் கூபனுக்கு ஒரு ரசீது எழுதி வைத்துக் கொள்ளவும். கூபன்களை ஒரு கவருக்குள் போட்டுத்தான் பெட்டியில் போட வேண்டுமென்ற அவசியமில்லை. கூபன்களை கவருக்குள் போடாமலும் மடிக்காமலும் அப்படியே போட்டு விடும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## பரிசு முடிவு

தமிழ் நாட்டில் சினிமா நடத்தும் ஊர்கள் மொத்தம் 300 க்கு மேல் இருக்கின்றன. இருந்தபோதிலும் அவற்றில் முதல் 100 ஊர்களில் இந்தப் படம் ஓடி முடிந்தவுடனேயே இந்தப் பரிசின் முடிவு நிர்ணயிக்கப்பட்டு விடும். மேற்படி ஊர்களிலிருந்து வந்து சேரும் கூபன்கள் சென்னையில் ஜெமினி ஸ்டூடியோவில் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பரிசிலனை முடிந்தான பிறகு சரியான விடையும், பரிசு பெற்றவரின் ஊர் பெயர் விலாசம் முதலிய விவரங்களும், தினசரிப் பத்திரிகைகளிலும் "ஆனந்த விகடன்", "நாதர்" பத்திரிகைகளிலும் வெளியிடப்படும். இப்போட்டி சம்பந்தமாக இன்னும் ஏதாவது விவரங்கள் வெளியிட வேண்டியிருக்கும் பட்சத்தில் அவை ஆனந்த விகடனில் வெளியாகும்.

பரிசின் நோக்கம் :— தமிழ் இசையைப் போற்றியும் பரப்பியும் வர, தமிழ் நாட்டில் பெரும் முயற்சி நடந்து வருவது எல்லாரும் அறிந்ததே. சங்கீதம், சாஹித்தியம், பாவம் இவற்றின் பெருமையை அறிய வேண்டுமானால் தமிழ் பாட்டுக்களே நிறைந்த கந்தனார் போன்ற படங்கள் அடிக்கடி வெளி வரவேண்டியது அவசியமாகும். அவை தமிழுக்கே பெரும் சேவை செய்வனவாகும். ஜெமினி கந்தனார் படத்தில் சங்கீத புஷ்டி, சாஹித்தியப் பெருமை, அர்த்த பாவம் இவற்றிற்கு விசேஷ கவனம் செலுத்தப்பட்டிருப்பதோடு, நடிகர்கள் உணர்ச்சியோடு பாடுவதற்கு வேண்டிய சிரமமும் மிகவும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஜெமினி கந்தனரில் மொத்தம் 32 பாட்டுக்கள் உள்ளன. இவற்றில் சில, சங்கீதத்தில் சிறந்தவை. சில, சாஹித்தியத்தில் சிறந்தவை. சில, அர்த்த பாவத்தில் சிறந்தவை. ஒரு சில பாட்டுக்கள் மேலே சொல்லியுள்ள, எல்லா அம்சங்களிலும் சிறந்து விளங்குகின்றன. இந்தப் பாட்டுக்கள் எவை என்று கண்டு பிடிப்பதில் ஜனங்கள் தமது அறிவையும், புத்தி கூர்மையையும் செலவிட்டால் மேற்படி பாட்டுக்கள் பிராபல்ய மடைவதோடு இனி மேலும் இதைப் போன்ற உயர்வுடன் தமிழ்ப் பாட்டுக்கள் கணக்கின்றி வெளி வருவது சாத்தியமாகும். இதுவே தான் இந்தப் பரிசுத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தினால் நீங்கள் செலவிட வேண்டியது ஒன்று மில்லை. ஆனால் பரிசு ரூ 10,000மும் பெறக்கூடும். இந்தத் திட்டத்தில் ஆண் பெண் பெரியோர் சிறியோர் குழந்தைகள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். எவரொருவர் சிந்தனித்து தமது மூளையைச் செலவிட்டு விடை தருகிறாரோ அவர் பலனடைவது நிச்சயம்.

ஆனந்த விகடன் பிரஸ், சென்னை. CM—Sep. '42 J-5 10.

# மங்கம்மா சபதம்



ஜெமினி
தயாரிப்பு
ஜெமினி
ரிலீஸ்

டைரக்ஷன்: ஆசார்யா

வசுந்தரா.
ரஞ்சன்..
N.S.கிருஷ்ணன்
T.A.மதுரம்.